## 1. நிதிக் கூற்றுகள்

### 1.1 அபிப்பிராயம்

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள தேசிய நூலக தகவல் விஞ்ஞான நிறுவனத்தின் 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்று நான் கருதுகின்ற எனது கருத்துகள் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, நிறுவனத்தின் நிதிக் கூற்றுகள் ஊடாக 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்தின் ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து நிறுவனத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.
- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,
- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பில் கணக்காய்வு அவதானிப்பு

### 1.5.1 இலங்கை அரசு துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

| உரிய தரத்துடன் கூடிய தொடருடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை அரச துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இல் 65 பந்தி பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யாமை காரணமாக 4 வகுப்பு சொத்துக்களுக்கான செலவினம் ரூபா.13,462,474 ஆன சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் பொறித்- | 2023 ஆண்டில் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட எல்லா சொத்துக்களையும் மீள்கணிப்பீடு செய்து உள்ளடக்குவதற்கு நடவடி-க்கை மேற்றொகள்ளப்படும். Quick book Accounting package இல் ஆற்றல் பெறுமதி 2022 ஆம் ஆண்டின் கணக்குகளை | இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்கள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளதல் வேண்டும். |

| | |
|---|---|
| தொகுதிகள் முற்றுமுழுதாக தேய்-மானம் செய்யப்பட்டிருந்ததுடன், மேலும் பயன்பாட்டில் காணப்பட்டன. அதன்படி, ஏற்பட்ட மதிப்பிடப்பட்ட தவறை இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 03 பிரகாரம் மீள்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்-கொள்ளப்படவில்லை. | தயாரிக்கும்-போது கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்-ளப்படும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைப்பாடுகள்

---------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்விற்கான ஆண்டில் பல்கலைக்கழகத்திடம் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா.1,000,000 ஆன மூலதன அளிப்புகள் தொடர்பில் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 பிரகாரம் நிதிக் கூற்றுகளில் அடை-யாளம் காணுதல் மற்றும் அளவிடல் மேற்கொள்-ளப்படவில்லை. | அடுத்துவரும் கணக்காண்டில் கணக்கீட்டு நியமம் 11 பிரகாரம் மூலதன அளிப்புகளை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை அரசு துறை கணக்கீட்டு நியமங்கள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் நேரடியாக வங்கியிடம் கிடைக்கப்-பெற்றிருந்த மொத்தம் ரூபா. 4,173,405 தொகை வருமானமாக அடையாளம் காணப்பட்டு கணக்கு வைக்கப்படவில்லை. | அதிகளவிலான கற்கை-நெறிகள் 2021 ஆம் ஆண்டில் திசெம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், ரூபா.மில்லியன் 4.1 ஆன அதிக தொகை நேரடியான பொறுப்புகளாக சேர்ந்துள்ளது. இந்த தொகை முற்றுமுழுதாக அடையாளம் காண முடியுமான தொகையாகும். | நேரடியான வரவு வைத்தல்கள் ஏற்புடைய ஆண்டின் வருமானத்தில் சரியாக அடையாளம் காணப்பட்டு ஆண்டின் வருமானத்தில் கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கு எழுத்திலான சாட்சிகள் இல்லாமை

-----------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனம் பொருட்டு விரிவுரை-யாளர் பதவிக்காக வெற்றிடம் காணுகையில், கற்கைநெறிகளை நடாத்துவதற்கு 68 வெளியக விரிவுரையாளர்களின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டு அதற்காக மீளாய்விற்கான ஆண்டில் மொத்தம் | நிறுவனத்தால் நடாத்தப்படுகின்ற கற்கைநெறிகளின் பொருட்டு வெளியக விரிவுரையாளர்கள் நூலக மற்றும் தகவல் விஞ்ஞான துறை சேவையில் ஈடுபட்டுள்ள வீதபடியான நபர்களுக்கிடையில், உரிய தகைமைகளை பூர்த்தி | தேவைக்கமைவாக பதவிகளை அங்கீகரித்தக் கொண்டு தேவையான ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | |
|---|---|
| ரூபா.3,215,000 ஐ செலுத்தப்பட்டிருந்தது. வெளியக விரிவுரையாளர்களை ஈடுபடுத்திக் கொள்ளும்போது வளப்பகிர்வா-ளர்களின் குழாம் உருவாக்க-ப்பட்டு அனுமதி பெற்றுக்கொள்-ளப்பட்டுள்ளது என்பதற்கான சாட்சிகள் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை. | செய்துள்ள நபர்களிடமிருந்து தெரிவு செய்யப்பட்டள்ளது. அவர்களுக்கான கொடுப்பனவு-கள் பல்கலைக்கழக மானிய-ங்கள் ஆணைக்குழுவின் சுற்று-நிருபங்களின் பிரகாரம் கற்கை-நெறி கற்பவர்களிடமிருந்து அறவிடப்படும் பணத்தைக் கொண்டு கொடுப்பனவு வழங்க-ப்படுகிறது. 2021 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் இரண்டு விரிவுரை-யாளர்கள் மட்டும் இருந்ததுடன், ஒருவர் (sabbatical leave) லீவு பெற்றிருந்தார். அதன் காரணமாக வெளியக விரிவுரையாளர்கள் அதிக எண்ணிக்கையினரிட-மிருந்து சேவை பெற்றுக்கொள்ள வேண்டி ஏற்பட்டது. |

## 1.6 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | இணங்காமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 (1) பிரிவு | நிறுவனம் பொருட்டு பிரிதொரு உள்ளக கணக்காய்வப் பிரிவு தாபிக்கப்படவில்லை. | உதவி உள்ளக கணக்காய்வாளர் மற்றும் உதவி பதவியணி ஆட்சேர்ப்புச் செய்வதற்காக முகாமைத்துவ சபை கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது.<br><br>அதன்படி 2020 யூன் 11 ஆம் திகதி உள்ளக கணக்காய்வுப் பிரிவுக்-கான பதவியணிக்கு அனுமதி கோரப்பட்டு பல்கலைக்கழக மானி-யங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கலவி அமைச்சு ஊடாக நிதி அமைச்சின முகாமை-த்தவ செவைகள் திணைக்களத்திடம் அனுப்பி வைக்கப்படி-னும் இதுவரை அனு-மதி கிடைக்கப்-பெறவில்லை. | சட்டம் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் திருத்தம் செய்யப்பட்ட நிதி ஒழுங்குவிதி 371 (2) பிரிவு | கட்டுநிதி பெறப்படும் பணி முடிவடைந்-தவுடன் தீர்க்கப்-படுதல் வேண்டுமா-யினும், மீளாய்விற்-கான ஆண்டில் அவ்வாறு வழங்க-ப்பட்ட மொத்தம் ரூபா.120,880 ஆன 09 முற்பணங்களை தீர்க்கம்போது 05 நாட்கள் தொடக்கம் 106 நாட்கள் வரை கால தாமதம் அடைந்திருந்தது. | COVID 19 காரணமாக 2021 ஆண்டில் நிறு-வனம் அதிக காலம் மூடப்படுதல் மற்றும் முழுமையான ஆற்ற-லுடன் அலுவலகம் நடாத்தப்படாமை காரணமாக வவுச்சர் ஒப்பமிடுவதற்கு தாமதம் ஏற்பட்டுள்ளது. ஆயினும் முற்பணம் தொகை பெற்றுக்-கொண்டவுடன் ஏற்புடைய பணிக்கு பயன்படுத்தப்பட்டு அப்பணி முடிவுறுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளதல் வேண்டும். |
| (இ) | 1995 யூலை 14 ஆம் திகதிய 636 ஆமி இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 அம் ஆண்டு வரை 24 கற்கைநெறிகளுக்கு ஏற்புடையதாக நடாத்தப்பட்டிருந்த 21 பரீட்சைகளின் பெறுபேறுகள் 2022 பெப்ருவரி 14 ஆம் திகதி வரை வழங்க-ப்படாதிருந்தது. அதேபோன்று 13 கற்கைநெறிகளுக்கு ஏற்புடையதாக 23 பரீட்சைகளின் பெறு-பேறுகள் வழங்குதல் 67 நாட்கள் தொட-க்கம் 535 நாட்கள் வரை தாமதத்தின் பின்னர் வழங்கப்பட்-டிருந்தது. | Covid -19 நிலைமை காரணமாக மாண-வர்கள் ஒப்படைகள் வழங்குதல் தாமத-மடைதல், வாரத்தில் ஒரு சில நாட்களுக்கு மட்டும் அலுவலக கடமைகளை நிறை-வேற்றுதல், இணை-யத்துடன் நேரடி தொடர்புகள் மூலம் மேற்கொள்கின்ற பாடங்களுக்கு விடைத்தாள்கள் அப்போதே whatsapp மூலம் அழைப்பித்துக் கொண்டாலும், அஞ்சல் மூலம் கிடைக்கப்பெற்றதன் பின்னர் விடைத்-தாள்களை பரிசோதித்தல் போன்ற விடயங்கள் காரணங்களா-கியுள்ளன. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளதல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

--------------------------

### 2.1 நிதிசார் விளைபயன்

------------------------------

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளபையன் ரூபா. 3,092,628 ஆன பற்றாக்குறை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா. 2,444,277 ஆகும். அதன் படி நிதிசார் விளைபயனில் ரூபா .648,351 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஏனைய வருமானம் குறைவடைதல் பிரதான காரணமாகியது.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் கிடைக்கப்பெற வேண்டிய மாணவர் கட்டணங்களின் வருமானம் (Receivables from Students) ரூ.5,337,762 ஆவதுடன் அதனுள் 01 ஆண்டுக்கு அதிகமான கடனாளிகளின் மீதி ரூபா.2,450,000 ஆகும். அது மொத்த கடனாளிகளில் 46% ஆக காணப்பட்டதுடன், அந்த பணத்தொகை அறவிடுவதை தவறவிடப்பட்டிருந்தது. | 01 ஆண்டுக்கு குறைந்த கற்கைநெறிகளின் பொருட்டு கிடைக்கப்பெற வேண்டிய கற்கைநெறி கட்டணங்களில் அதிக தொகை தற்பொது கிடைக்கப்பெற்றுள்ளது. எஞ்சிய தொகையும் கற்கைநெறி முடி-வடைவதற்கு முன்னர் அறவிடு-வதற்கு நடவடிக்கை மேற்-கொள்ளப்படும். 1-4 ஆண்டு-களுக்கிடையில் கிடைக்கப்பெற வேண்டிய தொகையில் கற்கைநெறிகளின் முதலாவது ஆண்டில் செலுத்தப்பட்டு பதிவாகியுள்ள மாணவர்களை குறிப்பிடப்படுகிறது. அவர்கள் பரீட்சைகளை சித்தியடையாமல் இருத்தல் அல்லது சிரமம் காரணமாக கற்கைநெறிகளை விட்டுச் சென்ற மாணவர்-களாவார்கள். அவர்களது கற்கைநெறிக் காலம் 03 ஆண்டுகள் கடந்த பின்னர் முகாமைத்துவ சபையின் அனும-தியுடன், ஆவணங்களிலிருந்து அகற்றுவதற்கு இவ்வாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதேபோன்று மாணவர்களிடம் கிடைக்கப்பெற வேண்டிய கற்கைநெறி கட்டணங்கள் நிலுவையாக இருப்பதை தவிர்-ப்பதற்கு உரிய முறைமை தற்போது அறிமுகப்படுத்த-ப்பட்டுள்ளது. | அந்தந்த கணக்கு ஆண்டுகளுக்கு ஏற்புடையதாக கிடைக்கப்பெற வேண்டிய வருமானம் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளதல் வேண்டும். |